in continuation of previous page....

CREDIT RATING: This being the issue of Equity Shares, no credit rating is required.
DEBENTURE TRUSTEES: This being the issue of Equity Shares, the appointment of Trustees is not required.
IPO GRADING: Since this issue is made in terms of Chapter IX of the SEBI (ICDR) Regulations, there is no requirement of appointing an IPO Grading Agency.
BASIS OF ISSUE PRICE: The Issue Price is determined by the Company in consultation with the Lead Manager. The financial data presented in section "Basis of Issue Price" on page no. 89 of the Red Herring Prospectus are based on Company's Restated Financial Statements. Investors should also refer to the section titled "Risk factors" and "Restated Financial Statement" on page no. 24 and 182 respectively of the Red Herring Prospectus.

ADDITIONAL INFORMATION AS REQUIRED UNDER SECTION 30 OF THE COMPANIES ACT, 2013

CONTENTS OF THE MEMORANDUM OF ASSOCIATION OF OUR COMPANY AS REGARDS ITS OBJECTS: For information on the main objects and other objects of our Company, see "History and Certain Corporate Matters" on page 147 of the Red Herring Prospectus. The Memorandum of Association of our Company is a material document for inspection in relation to the Issue. For further details, see the section "Material Contracts and Documents for Inspection" on page 360 of the Red Herring Prospectus.
LIABILITY OF MEMBERS OF THE COMPANY: Limited by shares.
AMOUNT OF SHARE CAPITAL OF THE COMPANY AND CAPITAL STRUCTURE: The Authorised share capital of the Company is ₹ 25,00,00,000/- divided into 2,50,00,000 Equity Shares of ₹ 10/- each. The issued, subscribed and paid-up share capital of the Company before the Issue is ₹ 17,81,11,350/- divided into 1,78,11,135 Equity Shares of ₹ 10/- each. For details of the Capital Structure, see chapter titled "Capital Structure" beginning on page 57 of the Red Herring Prospectus.
NAMES OF THE SIGNATORIES TO THE MEMORANDUM OF ASSOCIATION OF THE COMPANY AND THE NUMBER OF EQUITY SHARES SUBSCRIBED BY THEM: Given below are the names of the signatories of the Memorandum of Association of the Company and the number of Equity Shares subscribed by them at the time of signing of the Memorandum of Association of our Company: Vee Rajmohan- 500 Equity Shares and Savita Pradeep- 500 Equity Share, aggregating to 1,000 Equity Shares of ₹100/- each.

BOOK RUNNING LEAD MANAGER	REGISTRAR TO THE ISSUE	COMPANY SECRETARY AND COMPLIANCE OFFICER
NARNOLIA FINANCIAL SERVICES LIMITED 201, 2nd Floor, Marble Arch, 236 B A.J.C Bose Road, Kolkata, West Bengal- 700020, India **Tel:** +91-8130678743; **Email:** pankaj.passi@narnolia.com **Contact Person:** Mr. Pankaj Pasi **Website:** www.narnolia.com **SEBI registration number:** INM000010791 **CIN:** U51909WB1995PLC072876	**PURVA SHAREGISTRY (INDIA) PRIVATE LIMITED** **Address:** 9, Shiv Shakti Industrial Estate, J. R. Boricha Marg, Lower Parel (East) Mumbai 400011, Maharashtra, India **Telephone:** +91 022 2301 8261 **Email:** support@purvashare.com **Website:** www.purvashare.com **Contact Person:** Ms. Deepali Dhuri **SEBI Registration Number:** INR000001112 **CIN:** U67120MH1993PTC074079	**Ms. Priyanka Bansal** 55, SIDCO Industrial Estates, Thirumazhisai Thirumushi, Tiruvallur, Poonamallee, Tamil Nadu, India, 600124 **Telephone:** + 91 44 26811221, **Email:** cs@supremepower.in **Website:** www.supremepower.in Investors can contact our Company Secretary and Compliance Officer, the Lead Manager or the Registrar to the Issue, in case of any pre-issue or post-issue related problems, such as non-receipt of letters of allotment, non-credit of allotted Equity Shares in the respective beneficiary account, non-receipt of refund orders and non-receipt of funds by electronic mode etc.

AVAILABILITY OF RED HERRING PROSPECTUS: Investors are advised to refer to the Red Herring Prospectus and the Risk Factors contained therein before applying in the Issue. Full copy of the Red Herring Prospectus is available on the website of the SEBI at www.sebi.gov.in , the website of the Lead Manager to the Issue at www.narnolia.com, website of company at www.supremepower.in and websites of stock exchange at www.nseindia.com.
AVAILABILITY OF BID-CUM-APPLICATION FORMS: Bid-Cum-Application forms can be obtained from the Registered Office of the Company: Supreme Power Equipment Limited (Telephone**:** + 91 44 26811221) **Lead Manager**: Narnolia Financial Services Limited (Telephone**:** +91- 8130678743). Bid-cum-application Forms will also be available on the website of NSE (www.nseindia.com) and the designated branches of SCSBs, the list of which is available at websites of the Stock Exchange and SEBI.
APPLICATIONS SUPPORTED BY BLOCKED AMOUNT (ASBA): The investors are required to fill the application form and submit the same to the relevant SCSBs at the specific locations or registered brokers at the broker centers or RTA or DP's. The SCSB's will block the amount in the account as per the authority contained in application form. On allotment, amount will be unblocked and account will be debited only to the extent required to be paid for allotment of shares. Hence, there will be no need of refund. For more details on the ASBA process, please refer to the details given in application forms and Red Herring Prospectus and also please refer to the chapter titled "Issue Procedure" on page 290 of the Red Herring Prospectus.
APPLICATION SUPPORTED WITH UNIFIED PAYMENTS INTERFACE: Investors are advised to carefully refer SEBI Circular SEBI/HO/CFD/DIL2/CIR/P/2018/138 dated November 01, 2018 and as modified through its SEBI circular (SEBI/HO/CFD/ DIL2/CIR/P/2019/50) dated April 3, 2019, SEBI circular (SEBI/HO/CFD/DIL2/CIR/P/2019/76) dated June 28, 2019, SEBI circular no. SEBI/HO/CFD/DIL2/CIR/P/2019/85 dated July 26, 2019, SEBI Circular SEBI/HO/CFD/DCR2/CIR/P/2019/133 dated November 08, 2019, SEBI Circular No. SEBI/HO/CFD/DIL2/CIR/P/2020/50 dated March 30, 2020, SEBI circular no. SEBI/HO/CFD/DIL2/CIR/P/2021/2480/1/M dated March 16, 2021, SEBI circular no. SEBI/HO/CFD/DIL2/CIR/P/2021/47 dated March 31, 2021, SEBI Circular no. SEBI/HO/CFD/DIL2/P/CIR/2021/570 dated June 2, 2021, SEBI Circular no. SEBI/HO/CFD/DIL2/CIR/P/2022/45 dated April 5, 2022 and SEBI Circular no. SEBI/HO/CFD/DIL2/CIR/P/2022/51 dated April 20, 2022 and any subsequent circulars or notifications issued by SEBI in this regard for the procedure to be followed for applying through UPI. Retail Individual Investor have to apply through UPI Mechanism. Retail Individual Investor whose bank is not live on UPI as on date of this circular, may use the other alternate channels available to them viz. Submission of application form with SCSBs/ using the facility linked online trading, demat and bank account list. For further details, please refer the chapter titled "Issue Procedure" beginning on page 290 of the Red Herring Prospectus.
Sponsor Bank to the Issue: YES Bank Limited
Banker to the Issue, Escrow Collection Bank and Refund Banker: YES Bank Limited
Investor should read the Red Herring Prospectus carefully, including the "Risk Factors" beginning on page 24 of the Red Herring Prospectus before making any investment decision.
All capitalized terms used herein and not specifically defined shall have the same meaning as ascribed to them in the Red Herring Prospectus.

For SUPREME POWER EQUIPMENT LIMITED
On Behalf of the Board of Directors
Sd/-
Vee Rajmohan
Managing Director

Place: Chennai, Tamil Nadu
Date: December 18, 2023

Supreme Power Equipment Limited is proposing, subject to applicable statutory and regulatory requirements, receipt of requisite approvals, market conditions and other considerations, to undertake an initial public offering of its Equity Shares and has filed the Red Herring Prospectus with Registrar of Companies, Chennai on to the Issue at www.narnolia.com, website of company at www.supremepower.in and websites of NSE i.e. www.nseindia.com, respectively. Investors should note that investment in equity shares involves a high degree of risk and for details relating to the same, see section titled "Risk Factors" beginning on page 24 of the Red Herring Prospectus. Potential investors should not rely on the Red Herring Prospectus for making any investment decision.
The Equity Shares offered in the Issue have not been and will not be registered under the U.S. Securities Act of 1933, as amended (the "Securities Act") or any state securities laws in the United States, and unless so registered, may not be offered or sold within the United States except pursuant to an exemption from, or in a transaction not subject to, the registration requirements of the Securities Act and any applicable U.S. state securities laws. There will be no public offering in the United States and the securities being offered in this announcement are not being offered or sold in the United States.

ரூ.6,000 வெள்ள நிவாரணம் வழங்கும் திட்டம்

காஞ்சி, செங்கை, திருவள்ளூரில் அமைச்சர்கள் தொடங்கி வைப்பு

● **காஞ்சி/செங்கை/திருவள்ளூர்**
மிக்ஜாம் புயல், மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்ட மக்களுக்கு ரூ.6 ஆயிரம் நிவாரணம் வழங்கும் திட்டத்தை அமைச்சர்கள் அன்பரசன், காந்தி தொடங்கி வைத்தனர்.

கடந்த டிச. 3, 4 ஆகிய தேதிகளில் மிக்ஜாம் புயல் காரணமாக சென்னையில் அதிக கனமழை பெய்தது. மேலும் செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களிலும் குறிப்பிட்ட சில வட்டங்களில் கனமழை பெய்தது. இதனால் பொது மக்களுக்குக் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டு அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது. இதனால் அரசு சார்பில் ரூ.6,000 நிவாரண

திருவள்ளூர் மாவட்டம், மாதர்பாக்கம் பகுதியில் புயல் நிவாரண உதவித் தொகை வழங்கும் திட்டத்தை அமைச்சர் ஆர்.காந்தி தொடங்கிவைத்தார்.

தொகை வழங்க முடிவு செய்யப்பட்டு டோக்கன் வழங்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று ரூ.6,000 வெள்ள நிவாரணம் வழங்கும் பணி காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில் தொடங்கப்பட்டது. செங்கல்பட்டு மாவட்டத்தில் பம்மல் அண்ணா நகர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் பகுதிகளில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் இத்திட்டத்தைத் தொடங்கி வைத்தார். அதேபோல் திருவள்ளூர் மாவட்டம், மாதர்பாக்கம் பகுதியில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் காந்தி தொடங்கி வைத்தார்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் 4,08,488 குடும்பங்களுக்கும், காஞ்சியில் 1,31,149 குடும்பங்களுக்கும், திருவள்ளூர் மாவட்டத்தில் 6,08,726 குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இந்த நிகழ்ச்சிகளில் செங்கை ஆட்சியர் ஆ.ர.ராகுல் நாத், காஞ்சி ஆட்சியர் கலைச்செல்வி மற்றும் எம்.பி, எம்எல்ஏக்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.

கும்மிடிப்பூண்டி அருகே 8 வயது சிறுவன் மாயம்

காவல் நிலையத்தை பெண்கள் முற்றுகை

● **கும்மிடிப்பூண்டி**
கும்மிடிப்பூண்டி அருகே மாயமான 8 வயது சிறுவனை கண்டுபிடித்து தரக்கோரி பெண்கள் காவல் நிலையத்தை முற்றுகையிட்டனர்.

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி அருகே உள்ள பல்லவாடா கிராமத்தைச் சேர்ந்த சுரேஷ் - சிந்து மதி தம்பதியின் மகன் அனிஷ்(8). இவர் பல்லவாடா பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 2-ம் வகுப்பு படித்து வந்தார். அனிஷ், நேற்று முன்தினம் மாலை விளையாடுவதற்காக வீட்டைவிட்டு வெளியே சென்றார். ஆனால், நீண்ட நேரமாகியும் வீடு திரும்பவில்லை.

இதனால் அதிர்ச்சியடைந்த பெற்றோர் பல்வேறு இடங்களில் தேடியும் அனிஷ் கிடைக்கவில்லை. இந்நிலையில், அவர்களின் வீட்டருகே வசிக்கும் பெண் ஒருவரின் மோட்டார் சைக்கிளில் சிறுவன் அனிஷ் சென்றதாக இளைஞர்கள் சிலர் தெரிவித்ததாக கூறப்படுகிறது. பாதிரிவேடு போலீஸார் வழக்குப் பதிவு செய்து, சிறுவனை தேடி வருகின்றனர்.

இதற்கிடையே மாயமான சிறுவனை உடனடியாக கண்டுபிடித்து தரக்கோரி பல்லவாடா கிராமத்தைச் சேர்ந்த சுமார் 50 பெண்கள் நேற்று மதியம் பாதிரிவேடு காவல் நிலையத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்களை சமாதானப்படுத்திய போலீஸார், "சிறுவன் மாயமானது தொடர்பாக தீவிர விசாரணை மேற்கொண்டு வருகிறோம். விரைவில் சிறுவனைக் கண்டுபிடித்து, பெற்றோரிடம் ஒப்படைப்போம்" என, உறுதியளித்ததை அடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

அரசு பள்ளி மாணவர்களுக்கும் விரைவில் பயோமெட்ரிக் முறை அறிமுகம்

● **பல்லாவரம்**
தமிழக பள்ளிக்கல்வித் துறை விரைவில் மாணவர்களுக்கும் பயோமெட்ரிக் வருகைப் பதிவேடு முறையை அறிமுகப்படுத்த உள்ளது. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் இம்முறையை அறிமுகப்படுத்த திட்டமிட்டு, சில அரசுப் பள்ளிகளில் பரீட்சார்த்த முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

கல்வி நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் அலுவலகங்களில், ஊழியர்கள் வருகைப் பதிவில் முறைகேடுகளைத் தடுக்கவும், நிர்வாக வசதிக்காகவும், 'பயோமெட்ரிக்' வருகைப் பதிவு பின்பற்றப்படுகிறது.

'கார்ப்பரேட்' நிறுவனங்களில் மட்டுமின்றி, சிறிய கடைகளிலும், இந்த முறை பயன்பாட்டில் உள்ளது. ஊழியர்களின் விரல் ரேகை அடிப்படையில் வருகை விவரம் பதிவு செய்யப்படுகிறது.

இந்த பயோமெட்ரிக் வருகைப்பதிவு திட்டத்தை தமிழகம் முழுவதும் அனைத்து அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலும் கடந்த 2019-ம் ஆண்டு இறுதியில் ஆசிரியர்களின் வருகையைப் பதிவு செய்யத் தமிழக அரசு அறிமுகம் செய்தது.

இந்நிலையில் தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் மாணவர்களுக்கும் பயோமெட்ரிக் வருகைப்பதிவு சோதனை முறையில் அறிமுகமாகிறது. செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் மறைமலை அடிகளார் அரசு மேல்நிலைப் பள்ளியில், இந்த திட்டம் சோதனை முறையில் அமலாகிறது. 6-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை பயிலும் 300 மாணவர்களுக்கு பயோமெட்ரிக் முறை பயன்படுத்தப்படும். இந்த திட்டத்தின் செயல்பாடுகளுக்கு ஏற்ப, மற்ற பள்ளிகளுக்கும், பயோமெட்ரிக் வருகைப் பதிவை விரிவுபடுத்த, அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

இந்த திட்டம் அமலானதால், அரசின் நலத்திட்டங்களை தவறாக கணக்கிடுவது, மாணவர்களின் எண்ணிக்கையில் போலிகளைச் சேர்த்து, ஆசிரியர்கள் நியமனத்தை தக்க வைப்பது போன்ற பிரச்சினைகளுக்கு, முற்றுப்புள்ளி வைக்கப்படும். பயோமெட்ரிக் கருவி பொருத்துவதன் மூலம் பள்ளியின் வருகைப்பதிவு, அழிக்க முடியாத ஆவணமாகி விடும் என கல்வித் துறை வட்டாரங்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆவடியில் சாலையில் ஓடிக்கொண்டிருந்த காரில் திடீர் தீ

● **ஆவடி**
திருவள்ளூர் மாவட்டம், ஆவடி-பருத்திப்பட்டு பகுதியைச் சேர்ந்தவர் அனீஸ். இவர், நேற்று வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்க, ஆவடியில் உள்ள சூப்பர் மார்க்கெட்டுக்கு காரில் சென்று கொண்டிருந்தார்.

ஆவடி, புதிய ராணுவ சாலையில், பருத்திப்பட்டு- ஸ்ரீராம் நகர் அருகே சென்று கொண்டிருந்த போது காரின் இன்ஜின் பகுதியில் தீப்பற்றி எரிந்தது. அனீஸ் உடனே காரை நிறுத்தி விட்டு, அதிலிருந்து இறங்கினார்.

அவர் இறங்கிய சில விநாடிகளில் தீ காரின் பிற பகுதிகளிலும் விரைவாகப் பரவி கொழுந்துவிட்டு எரிந்தது. தகவலறிந்த ஆவடி தீயணைப்பு நிலைய வீரர்கள் விரைந்து வந்து தீயை அணைத்தனர். இருப்பினும் கார் முற்றிலும் நாசமானது. ஆவடி போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து விசாரித்து வருகின்றனர்.

பூட்டிய வீட்டில்

மயங்கிய நிலையில் இருந்த கணவன், மனைவி உயிரிழப்பு

● **திருவள்ளூர்**
பெரியபாளையம் அருகே பூட்டிய வீட்டில் மயங்கிய நிலையில் இருந்த கணவன், மனைவி உயிரிழந்த சம்பவம், பொதுமக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தென்காசி மாவட்டம், பொட்டல் புதூர் கிராமத்தைச் சேர்ந்தவர் அப்துல் ரஹ்மான்(60). இவரது மனைவி ஜமால் பீவி(55). இவர்கள் இருவரும் கடந்த ஒரு வாரத்துக்கு முன்பு, திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம் அருகே உள்ள விஷ்ணுவாக்கம் கிராமத்தில் வாடகைக்கு வீடு எடுத்து தங்கி, தனியார் கட்டுமான நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு உணவு தயாரித்து கொடுக்கும் பணியில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில், அப்துல் ரஹ்மானும், ஜமால் பீவியும் கடந்த 14-ம் தேதி இரவு வழக்கம்போல், உணவருந்திவிட்டு, வீட்டை உள் பக்கமாக பூட்டிவிட்டு உறங்கினர். ஆனால், மறுநாளான 15-ம் தேதி காலை நீண்ட நேரமாகியும் அவர்களின் வீடு திறக்காமல் இருந்ததால், அதிர்ச்சியடைந்த கட்டுமான தொழிலாளர்கள் வீட்டை உடைத்து, உள்ளே சென்று பார்த்தனர்.

அப்போது கணவன், மனைவி இருவரும் மயங்கிய நிலையில் இருந்தது தெரியவந்தது. இதை யடுத்து, இருவரும் மீட்கப்பட்டு, 108 ஆம்புலன்ஸ் மூலம் திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு மருத்துவர்களின் பரிசோதனையில் ஏற்கெனவே அப்துல் ரஹ்மான் உயிரிழந்தது தெரியவந்தது.

தொடர்ந்து, ஜமால் பீவி தீவிர சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி அவரும் உயிரிழந்தார்.

இதுகுறித்து, வெங்கல் போலீஸார் வழக்குப்பதிவு செய்து, கணவன், மனைவி இருவரும் உணவு ஒவ்வாமை காரணமாக உயிரிழந்தனரா? அல்லது வேறு காரணமா? என்பது குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

நாளைய மின்தடை

● **காஞ்சிபுரம்**
ஆரியபெரும்பாக்கம் துணை மின் நிலையத்தில் நாளை (டிச.19) பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளதால் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையில் கீழம்பி, பள்ளம்பி, சிறுகாவேரிபாக்கம், திம்மசமுத்திரம், கருப்படிதட்டிடை, மங்கையர்கரசி நகர், ஜே.ஜே. நகர், ஆரிய பெரும்பாக்கம், கூரம், செம்பரம்பாக்கம், புதுப்பாக்கம், பெரியகரும்பூர், சித்தேரிமேடு ஆகிய பகுதிகளில் மின்தடை செய்யப்படும் எனக் காஞ்சிபுரம் வடக்கு கோட்ட பொறுப்பு செயற்பொறியாளர் கூறியுள்ளார்.

இந்து தமிழ் திசை
பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தக் குழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.
படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

ஏஎம்என் குளோபல் குழுமத்தின் 14-ம் ஆண்டு விழாவையொட்டி நடிகர் மதன்பாபுக்கு விருது வழங்கப்பட்டது.

ஏஎம்என் குளோபல் குழுமம் சார்பில் ஸ்தாபன விருது வழங்கல்

● **சென்னை**
ஏஎம்என் குளோபல் குழுமத்தின் 14-ம் ஆண்டு விழாவையொட்டி முக்கிய பிரபலங்களுக்கு ஸ்தாபன விருதுகள் வழங்கப்பட்டன. இது உலகளவில் நிறுவப்பட்ட முதல் வகையான விருதாகும்.

'தி இந்து', நியூ உட்லேண்ட்ஸ் ஓட்டல், டி.ஜி.வைஷ்ணவா கல்லூரி, பொருளாதாரத் துறை முன்னாள் தலைவர் பாலசுப்ரமணியன், கேந்திரிய வித்யாலயா முன்னாள் துணை ஆணையர் சி.மணி, சாக்சபோன் குமாரஸ்வாமி, கிராபிக்ஸ்டில்ஸ் விஜேந்திரன், தொழிலதிபர்கள் நல்லி குப்புசாமி, உம்மிடி பங்காரு, திமுக மயிலாப்பூர் பிரிவு டி.தீபன், பட்டிமன்ற பேச்சாளர் ராஜா, நடிகர் மதன்பாபு உள்ளிட்டோருக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

விவேகானந்தா கல்லூரி முன்னாள் முதல்வரும், கணித வல்லுநருமான விட்டலுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

ஏஎம்என் குளோபல் குழும நிர்வாக இயக்குநர், பாடகி லதாமங்கேஷ்கரின் உறவினரும் லதா என்ற நூலின் இணை ஆசிரியர் ரச்னா ஷா ஆகியோர் முன்னிலையில் மயிலாப்பூர் எம்எல்ஏ வேலு விருதுகளை வழங்கினார். முன்னதாக கோலவிழி சேகர் பக்தி பாடல்களுடன் நிகழ்ச்சி தொடங்கியது. பிரவீன் பண்டிட் சாக்சபோன் இசையும், கிரேசி மோகனின் 'சாக்லேக் கிருஷ்ணா' நாடகமும் நடைபெற்றன.

சாரதா வெங்கட் அனைவரையும் வரவேற்றார். நெல்லை சுப்பையா நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். ஏஎம்என் குழுமத்தைச் சேர்ந்த மோகன்ராஜ், பாரதிதாசன், குலாப் பாஷா, ஹாஜிரா பேகம், ராதிகா, சக்ரவர்த்தி, வெங்கடேஷ், வாஜ ஹதுல்லா, உபைதுல்லா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்துஸ்தான் கல்வி நிறுவனத்தில்

மாணவர்கள் சேர்க்கைக்கான ஆன்லைன் நுழைவு தேர்வு தேதிகள் அறிவிப்பு

● **சென்னை**
இந்துஸ்தான் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி மற்றும் சயின்ஸ் பொறியியல் நுழைவுத் தேர்வு (HITSEEE), இந்துஸ்தான் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி & சயின்ஸ் பொது திறன் தேர்வு (HITSCAT) ஆகிய மாணவர் சேர்க்கைக்கான ஆன்லைன் நுழைவுத் தேர்வு தேதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்த செய்தியாளர் சந்திப்பின்போது 2024-ம் ஆண்டுக்கான மாணவர் சேர்க்கை தொடங்குவதாக துணைவேந்தர் எஸ்.என். ஸ்ரீதரா தெரிவித்தார். இதன்படி HITSEEE மற்றும் HITSCAT-க்கான ஆன்லைன் விண்ணப்பங்களை நேற்று தொடங்கி வைத்தார். ஹிட்ஸ் சார்பு துணைவேந்தர் அலெக்சாண்டர் ஜேசுதாசன் மாணவர் சேர்க்கையை வெற்றிகரமாகத் நடக்க திட்டமிட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதன்படி 2024 கல்வியாண்டுக்கான இந்துஸ்தான் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி மற்றும் சயின்ஸ் பொறியியல் நுழைவுத் தேர்வு (HITSEEE) ஆன்லைன் தேர்வுகள் அடுத்த ஆண்டு மே 3-ம் தேதி தொடங்கி மே 10-ம் தேதி வரை நடைபெறும். இந்த தேர்வுகளுக்கான பதிவு நேற்று முன்தினம் (டிச.16) தொடங்கி அடுத்த ஆண்டு ஏப்.29-ல் நிறைவடைகிறது. இதில் தேசிய அளவில் ரேங்க் வைத்திருக்கும் மாணவர்களுக்கு 100 சதவீதம் கல்விக் கட்டணம் தள்ளுபடி வழங்கப்படவுள்ளது.

ஹிட்ஸ் மாணவர் சேர்க்கைக்கான ஆன்லைன் நுழைவுத் தேர்வு தேதிகளை துணைவேந்தர் எஸ்.என். ஸ்ரீதரா, சார்புதுணைவேந்தர் அலெக்சாண்டர் ஜேசுதாசன், இயக்குநர் பொன் ராமலிங்கம் ஆகியோர் நேற்று வெளியிட்டனர்.

இதேபோல் இந்துஸ்தான் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி & சயின்ஸ் பொது திறன் தேர்வு (HITSCAT) தேர்வு அடுத்த ஆண்டு மே 20 மற்றும் 21-ல் நடைபெறும். இதற்கான விண்ணப்பங்கள் பதிவு நேற்று முன்தினம் (டிச.16) தொடங்கி அடுத்த ஆண்டு மே 13 வரை நடைபெறுகிறது.

இந்த தேர்வுகளில் தேர்வாகும் மாணவர்களுக்கு ஏராளமான கல்வி உதவித் தொகை திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் தகுதியுள்ள மற்றும் திறமையான மாணவர்களுக்கு ரூ.5 கோடிக்கும் அதிகமான உதவித் தொகைகளை பல்கலைக் கழகம் ஒவ்வோர் ஆண்டும் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து கல்வி நிறுவன அதிபர் ஆனந்த் ஜேக்கப் வர்கீஸ் கூறும்போது, "சமீபத்திய ஆண்டுகளில், மாணவர் சேர்க்கையில் கணிசமான அதிகரிப்பை கண்டுள்ளது. குறிப்பாக வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் தொடர்பான திட்டங்களின் தேவைகளை பூர்த்தி செய்ய, நாங்கள் தொடர்ந்து முயற்சிக்கிறோம். பாடத்திட்டம், வளங்கள், மற்றும் வசதிகளை மேம்படுத்தும் வகையில் ஒவ்வொரு கல்வியாண்டும் மாணவர்களுக்கு தரமான கல்வியை உறுதி செய்கிறோம்" என்றார்.

மேலும் கல்வி நிறுவன சார்பு அதிபர் அசோக் வர்கீஸ் பேசும்போது தகுதி வாய்ந்த மாணவர்கள் உரிய உதவித் தொகையை பெறுவதன் நன்மைகளைப் பற்றியும் கல்வி மற்றும் ஆராய்ச்சியில் சிறந்து விளங்குவது குறித்தும் தெரிவித்தார்.

துறைமுகத்தில் ஏர்கன் துப்பாக்கியுடன் இருந்த லாரி ஓட்டுநர் கைது

● **பொன்னேரி**
மீஞ்சூர் அருகே தனியார் துறைமுகத்தின் உள்ளே ஏர்கன் துப்பாக்கியுடன் இருந்த லாரி ஓட்டுநர் கைது செய்யப்பட்டார்.

திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் அருகே காட்டுப்பள்ளியில் தனியார் துறைமுகம் செயல்பட்டு வருகிறது. இந்த துறைமுகத்துக்கு நேற்று காலை தனியார் டிரான்ஸ்போர்ட் நிறுவனத்தின் லாரி ஓட்டுநரான, பெரம்பலூர் மாவட்டம், மேலப் புலியூரை சேர்ந்த கிருஷ்ணசாமி(36) லோடு ஏற்ற லாரியில் வந்தார். அவர் லாரியில் ஏற்றுவதற்கான சரக்கு உள்ள கப்பல் இன்றுதான் (டிச.18) வரும் என்பதால், குளிப்பதற்காக துறைமுகத்திலிருந்து வெளியே செல்ல முயன்றார்.

அப்போது, கிருஷ்ணசாமியை, துறைமுக வாயிலில் காவலர்கள் சோதனை செய்தனர். அச்சோதனையில், கிருஷ்ணசாமி ஏர்கன் துப்பாக்கி வைத்திருந்தது தெரிய வந்தது.

இதுகுறித்து, தகவலறிந்த காட்டூர் போலீஸார் சம்பவ இடம் விரைந்து விசாரணையில் ஈடுபட்டனர். இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்த காட்டூர் போலீஸார், கிருஷ்ணசாமியை கைது செய்து. அவரிடமிருந்து ஏர்கன் துப்பாக்கியைப் பறிமுதல் செய்தனர்.

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

I, Priyadharshan Joe Jerry, son of Thiru Arockiam Jerald, born on 17th August 1996 (District of Birth: Cuddalore), residing at No. 56, 1st Floor, BSR Vidhulatha Enclave, Giri Road, Thiyagaraya Nagar, Chennai-600 017, shall henceforth be known as PRIYADARSHAN JOE JERRY
-PRIYADHARSHAN JOE JERRY
Chennai, 1st December 202

பொது

சுற்றுலா

IRCTC
விமான சுற்றுலா
(சென்னையிலிருந்து)
அந்தமான்
23.01.2024 (6 நாட்கள்) Rs.52,800/-
ஒடிசா
பூரி-புவனேஸ்வர்-கொனார்க்-சிலிகா லேக்
06.02.2024 (5 நாட்கள்) Rs.38,500/-
வடகிழக்கு சுற்றுலா
கௌகாத்தி-ஷிலாங்-காசிரங்கா-சிரபுஞ்சி
10.02.2024 (7 நாட்கள்) Rs.47,500/-
விமான கட்டணம், உணவு, ஹோட்டலில் தங்கும் வசதி, போக்குவரத்து, GST உட்பட
8287931974 / 9003140682

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859-860, Anna Salai, Chennai 600002 on behalf of KSL MEDIA LIMITED, and Printed by D.Rajkumar at THG PUBLISHING PVT.LTD. Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kancheepuram Dist.Pin: 603209, Editor: K Asokan (Editor responsible for selection of news under the PRB Act).